# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## O.S.No.22/2024

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா . | : 4 | நாள் | : 27.02.2026 |
| பெயர் | : வேல்முருகன் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 27th day of February 2026.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வெள்ளத்தாய்க்கு எப்போது திருமணம் ஆனது என்பது எனக்கு தெரியாது. அவருக்கு ஒரு பெண் மகள் உண்டு. வெள்ளத்தாய்க்கு சுமார் 70 வயது இருக்கும். வேலுச்சாமிக்கு எப்போது திருமணம் ஆனது என்பது தெரியாது. அவருக்கு சுமார் 50 வயது இருக்கும். குருசாமி என்னை சாட்சி சொல்ல அழைத்தார். முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை குருசாமி சொன்னார் என்றால் சரியல்ல. குருசாமி குடும்பத்தாருக்கு சொந்தமாக 2 ஏக்கர் நிலம் உள்ளது. மொத்தமாக 5 ஏக்கர் இருந்தது அதில் விற்றது போக 2 ஏக்கர் உள்ளது. குருசாமி அண்ணன் வேலுசாமி விற்றுவிட்டார். அந்த சொத்துக்களை பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை. வேலுசாமிக்கு அவரது தந்தை உயிருடன்

இருந்தபோது சொத்துக்களை பிரித்து கொடுத்தார் அவர் அதை விற்றுவிட்டார். வேலுசாமியின் தந்தை சுமார் 25 வருடங்களுக்கு முன்பு இறந்துபோனார். வேலுச்சாமிக்கு பூர்வீக சொத்தின்ஒரு பகுதியை அவரது தந்தை பிரித்து கொடுத்தார். குருசாமியின் உடன்பிறந்தவர் 3 பேர். மூத்தவர் சகோதரியும், அடுத்தவர் சகோதரரும் ஆவார். சுப்பிரமணியன் உயிருடன் இருந்தபோது குருசாமியும் அவரது சகோதர சகோதரிகளும் ஒன்றாகத்தான் குடியிருந்தார்கள். அதன்பின்பு பாகம்பிரித்து தனித்தனியே போய்விட்டார்கள். பாகம் செய்து கொண்டபின்னர் சுப்பிரமணியன் வீட்டில் குருசாமி இருந்தார். குருசாமியின் தாயார் பெயர் ஞாபகம் இல்லை. சுப்பிரமணியனின் உடன்பிறந்தவர்கள் யார் என்று தெரியாது. சுப்பிரமணியன் குடும்பத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும்,சுப்பிரமணியன் தயாரித்த கொடுத்த முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் கையொப்பம்செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனக்கு தற்போது 33 வயதாகிறது. குருசாமி எனக்கு அண்ணன் முறை வேண்டும். குருசாமிக்காக நான் பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.27 17:00:18 +0530